# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>கூட்டப்பொருள்</u>

2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 10.08.2018 | **1)** தூத்துக்குடி மாநகராட்சியின் மூலம் தேசிய வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் நகர்ப்புற வீடற்ற ஏழைகள் கணக்கு எடுக்கப்பட்டது. மேற்படி வீடற்ற ஏழைகளுக்கு உணவு மற்றும் உறைவிடம் கொடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் போல்பேட்டை, புதிய பேருந்து நிலையம் அருகில் புதியதாக தங்கும் விடுதி அமைக்கும் பணிக்கு ரூ. 85.00 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.<br><br>மேற்கண்ட பணிக்கு தேசிய நகர்புற வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு மான்ய தொகை ரூ. 51.00 இலட்சம் மற்றும் மாநில அரசு மான்ய தொகை ரூ 34.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ 85.00 இலட்சம் முழு மான்யமாக பெற்று மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும் மேற்கண்ட வீடற்ற ஏழைகளுக்கான தங்கும் விடுதியினை 5 வருடங்களுக்கு தொடர் பராமரிப்பு மேற்கொண்டு அதில் தங்க வைக்கப்படும் வீடற்ற ஏழைகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கிட பெட்கிராட், என்.ஜி.ஓ. நிறுவனம் முன் வந்துள்ளது. அதன்படி மேற்படி நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு மற்றும் திறன்மேம்பாட்டு பயிற்சியினை ஐந்து வருடங்கள் நடத்துவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகறது.<br>**அலுவலக குறிப்பு**<br>**அ)**மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப அனுமதிக்கலாம்.<br>**ஆ)** மேற்படி நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சியினை ஐந்து வருடங்களுக்கு நடத்த அனுமதிக்கலாம்.<br>இ5/10381/14 | 132) அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக் கப்பட்டது. |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 10.08.2018